மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண். 161/2021**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.அசோக்சுப்பிரமணி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : பிரேமலதா (பி.வா.சா.1)<br>த/பெ.க/பெ :<br>கிராமம் :<br>தாலுகா : | சாதி :<br>மதம் :<br>தொழில் :<br>வயது : |

21.11.2025

<u>வாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை –</u>

வாதி என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் வாதி கணவருடைய சொத்துக்கள் அனைத்தும் வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனது சொந்த ஊர் திருத்தங்கல். எனது திருமணம் 1987ம் வருடம் நடைபெற்றது. திருமணத்தின்போது எனது கணவர் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் சிவகாசியில் ஒரு அச்சகத்தில் உதவியாளராக வேலை பார்த்து வந்தார். நான் தீப்பெட்டி ஆபிசில் தீக்குச்சி அடுக்கும் வேலை பார்த்து வந்தேன். எனக்கு இரண்டு குழந்தைகள். எனது மகன் சிவகாசியில் 1990ல் பிறந்தார், எனது மகள் திருத்தங்கலில் எனது வீட்டில் 1993ம் வருடம் பிறந்தார்.

2. நான் எந்த வருடம் திருச்சுழிக்கு வந்தேன் என்றால் 2018ம் வருடமா அல்லது 2020ம் வருடமா என்று எனக்கு ஞாபகமில்லை. எனது கணவருக்கு என்ன நோய் என்றால் நரம்பு தளர்ச்சி இருந்தது. திருமணமான இரண்டு வருடத்தில் எனது கணவருக்கு நரம்பு தளர்ச்சி மற்றும் மன தளர்ச்சி வந்துவிட்டது. அதனால் எனது கணவரால் எந்த வேலையும் சரிவர செய்யமுடியாது என்றால் சிறிய சிறிய வேலைகள் கட்டுமான தொழிலுக்கு அவ்வப்போது செல்வார், முடியவில்லை என்றால் பாதியிலேயே திரும்பி வந்துவிடுவார். அவரால் தொடர்ச்சியாக எந்த வேலையும் பார்க்கமுடியாது என்றால் சரிதான். எந்த ஒரு விசயத்தையும் கவனமாக பார்க்கமுடியாது என்றால் சரிதான், ஆனால் அது எப்போதும் அவ்வாறு இருக்காது. எனது கணவருக்கு ஏற்பட்ட

நோய்க்கு எங்கு சிகிச்சை பெற்றார் என்றால் சென்னை கீழ்ப்பாக்கம் மனநலம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

3. மருத்துவர்கள் தொடர்ந்து சிகிச்சை பெற வேண்டும் என்று அறிவுறுத்தி இருந்தார்கள் என்றால் இல்லை, அங்கு சரியானவுடன் அழைத்து வந்துவிட்டோம். நான் திருச்சுழிக்கு வந்தபிறகு தீப்பெட்டி ஆலைக்கு டீ விற்பனை செய்தேனா என்றால் செய்தேன். அந்த கம்பெனி பெயர் என்வென்றால் எனக்கு தெரியவில்லை. டீ ஆறிபோகும் என்று எனக்கு உமாநாதன் கெட்டில் வாங்கி கொடுத்த ஞாபகம் உள்ளதா என்றால் உமாநாதன் கெட்டில் வாங்கிக் கொடுக்கவில்லை, சென்னைக்கு 1ம் வாதி வீட்டிற்கு செல்லும்போது கெட்டில் வாங்குவதற்காக பணம் கொடுத்தார். வாதியின் குடும்பம் நாங்கள் எப்போதும் நல்லா இருக்கவேண்டும் என்று நினைத்தார்கள் என்றால் சரிதான், எனக்கு பண உதவி செய்தார்கள்.

4. எனது வருமானத்தில்தான் எனது குடும்பம் நடத்தவேண்டும் என்ற கட்டாயத்தில் இருந்தோம் என்றால் சரிதான். கடைசியாக சென்னையில் வாதிகள் வீட்டிற்கு எப்போது சென்றேன் என்றால் 2018ம் வருடம் எங்கள் குடும்ப நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டு வாதிகள் கூப்பிட்டதால் அவர்கள் வீட்டிற்கு சென்றேன். வாதிகள் இந்த வழக்கு போடும் வரை எந்த இடத்திலும் ஒரு எதிரியாகவோ, விரோதியாகவோ பார்க்கவில்லை என்றால் சரிதான். திருச்சுழியில் நாங்கள் இருக்கும் தெருவில் வாதியின் உறவினர்கள்தான் உள்ளார்கள் என்றால் இரண்டு பேர் உள்ளார்கள். சண்முகநாதனின் அத்தை வடிவின் வீடு மற்றும் அவரது மகள், பேர குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். திருச்சுழிக்கு வந்து நான் எந்த முகவரியில் குடியிருந்து வந்தேன் என்றால் பத்திர அலுவலகத்திற்கு எதிர்புறம் வாடகைக்கு வீடு எடுத்து தங்கியிருந்தேன். சண்முநாதன் எந்த வருடம் பணி ஓய்வு பெற்றார் என்று எனக்கு தெரியாது. எங்கு வேலை பார்த்தார் என்று தெரியுமா என்றால் மதுரையில் 2004–2005 காலகட்டத்தில் வேலை பார்த்தார். காரைக்குடியில் 2008 அல்லது 2007ல் வேலை பார்த்திருப்பார். 5 ஆண்டுகள் வேலை பார்த்திருப்பார். கடைசியாக விருதுநகரில் எப்போது வேலை பார்த்தார் என்றால் அவர் இறப்பதற்கு 1 வாரத்திற்கு முன்புதான் விருதுநகருக்கு வேலைக்கு சென்றார். மதுரையில் எப்போது வேலை பார்த்தார் என்றால் விருதுநகருக்கு செல்வதற்கு முன்னர் 1 வருடம் மதுரையில் வேலை பார்த்தார்.

5. வா.சா.ஆ.6 ஆவணத்தில் சண்முகநாதனின் மனைவி பெயர் உமாநாதன் என்ற குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 2007ம் ஆண்டு பதிவில் அவர் உள்ளது என்றால் சரிதான். அந்த வங்கி கணக்கானது சண்முகநாதன் இறக்கும்வரை செயல்பாட்டில் இருந்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பாஸ்புக்கில் உமாநாதன் பெயர் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 பென்சன் ஆவணத்திலும் நாமினியாக உமாநாதன் பெயர் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணமானது 2012ம் ஆண்டு பிரிண்ட்அவுட் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த புகைப்படம் 2012ம் ஆண்டு எடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி4ல் சண்முகநாதன் தனது மனைவியை 2002–லிருந்து பிரிந்துள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை யார் தயார் செய்தார் என்றால் நாங்கள் செய்ய சொல்லி எங்களது வழக்கறிஞர் தயார் செய்தார். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளபடி எனது குடும்பத்தை நடத்துவதற்கு கஷ்பட்டு வந்த நிலையில், சண்முகநாதனுக்கு எந்த உதவியும் என்னால் செய்ய முடியாது என்றால் நான் பணத்தால் எந்த உதவியும் செய்யவில்லை. அவரை பராமரித்தேன். சண்முகநாதன் இறக்கும் வரையில் தன்னுடைய சொந்தகாலில் இருந்து வெவ்வேறு இடங்களில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். அருமை மெஸ் என்பது சண்முகநாதன் உருவாக்கியது என்றால் சரிதான், மெஸ் நடத்தும் இடம் அவர்தான் கொடுத்தார்.

6. எனக்கு தமிழ் படிக்க எழுத தெரியாது. எனது முதல் விசாரணையில் நானும், எனது கணவரும் ஹோட்டலை பார்த்து கொண்டோம் என்றும், சண்முகநாதன் கணக்கு வழக்குகளை பார்த்துக்கொண்டார் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அருமை மெஸ் சண்முநாதனுக்கு சொந்தமானது என்றாலும், நாங்கள் இருவரும் அதில் வேலை பார்த்து வந்தோம் என்றாலும், தினமும் நடப்பதை கணக்கு கேட்பார் என்றால் சரிதான். நான் கொடுக்கும் உணவுகளை எவ்வித கேள்வியும் இன்றி சண்முகநாதன் சாப்பிடுவார் என்றால் சரிதான். அவர் எங்களை நம்பியிருந்ததால் நாங்கள் அவருக்கு எந்தவித கெடுதலும் செய்ய மாட்டோம் என நம்பியிருந்தார் என்றால் சரிதான். சண்முகநாதனின் குடும்பமான வாதிகளும், நாங்கள் அவர்களுக்கு

எந்தவித கெடுதலும், துரோகமும் செய்ய மாட்டோம் என நம்பியிருந்தார்கள் என்றால் சரிதான். 2011ம் வருடம் சண்முகநாதன் எனக்கும், எனது கணவருக்கும் உயில் எழுதி வைத்ததாக சொல்லியுள்ள நிலையில், அந்த விபரம் எப்போது எங்களுக்கு தெரியும் என்றால் 2வது உயில் எழுதுவதற்கு 2 மாதங்களுக்கு முன்பு தெரியும். 2வது உயில் எப்பபோது எழுதினார்கள் என்றால் சண்முகநாதன் இறப்பதற்கு 8 மாதங்களுக்கு முன்பு எழுதப்பட்டது. 2வது உயில் எதற்காக எழுதினார்கள் என்றால், முதல் உயில் எழுதிய விபரம் முதலில் எங்களுக்கு தெரியாது, அதில் எனது பெயரை லதா என்று அழைத்ததால் பிரேமலதா என்று எழுதுவதற்கு பதிலாக லதா என்று குறிப்பிட்டிருந்தார். அதன் காரணமாக 2வது உயில் எழுதப்பட்டது. சண்முகநாதன் மாத்திரைகள் சாப்பிடுவாரா என்றால் ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரைநோய் காரணமாக சாப்பிடுவார். 2வது உயில் எழுதப்படும்போது எனக்கு தெரியும் என்றால் சரிதான். 2வது உயிலில் உள்ள சாராம்சங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 2வது உயிலில் உள்ள விபரங்களை நானும், எனது குழந்தைகளும் சரிபார்த்துக் கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி உயில் குறித்து வேறு யாரிடமாவது பகிர்ந்து கொண்டேனா என்றால் இல்லை. மேற்படி உயில் அவர் இறக்கும்போது எனது வசம்தான் இருந்தது என்றால் சரிதான். மேற்படி உயிலானது 11.12.2017ம் தேதி எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உயிலில் மூன்று செடீயூல் விபரங்கள் உள்ளது என்றால் சரிதான். வாசாஆ12 உயில் ஆவணத்தில் 3வது செடீயூலாக விருதுநகர் பதிவு மாவட்டம் திருச்சுழி கிளை பதிவு வட்டம், பள்ளிமடம் கிராமத்தில் பட்டா எண். 315 சர்வே எண்.8/8ஏ, செண்ட் 35 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 19.02.2018ம் தேதி கோயமுத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த குமார் வேலாண்டி என்பவருக்கு மேற்படிசொத்தை சண்முகநாதன் விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் எனது பெயரில் பட்டா எண்.315ன்படி பட்டா தாக்கலுடன் நான் அடைந்து நான் இதுநாள் வரை எவ்வித வில்லங்க விவகாரங்களுக்கும் உட்படுத்தாமல் அனுபவித்து வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. இறந்த சண்முகநாதன் இப்படி ஒரு உயிலை எழுதி வைத்திருந்தார் என்றால் 2018ம் வருடம் மேற்படி சொத்தை உயிலை எழுதிய பிறகு அவர் அந்த சொத்தை விற்பனை செய்திருக்கமாட்டார் என்றால் சரியல்ல. மேற்படி உயில் சண்முகநான் என்னை நம்பிய காரணத்தினால் நாங்கள் அவரை மயக்கி உயிலை எழுதி வாங்கிக் கொண்டோம்

என்றால் சரியல்ல. மேற்படி உயில் பற்றிய விபரம் இறந்த சண்முகநாதனுக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

(குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).